# March 25, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உலகின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு வளாகத்தை நிர்வகித்து வரும் இந்தியாவின் ரிலையன்ஸ் நிறுவனம், ஈரானிடமிருந்து 50 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யை வாங்கியுள்ளது.

(i) ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளில் அமெரிக்கா தற்காலிக தளர்வுகளை அறிவித்த சில நாள்களிலேயே இந்தக் கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ii) அமெரிக்காவின் 30 நாள் அவகாசம்:

- சர்வதேச சந்தையில் நிலவும் பற்றாக்குறை காரணமாக, ஈரான் கச்சா எண்ணெய் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளை டிரம்ப் நிர்வாகம் கடந்த வெள்ளிக்கிழமை தற்காலிகமாக நீக்கியது.
- குறிப்பாக, மார்ச் 20-ஆம் தேதிக்குள் கப்பல்களில் ஏற்றப்பட்டு, கடலில் பயணித்துக் கொண்டிருக்கும் கச்சா எண்ணெயை வாங்குவதற்கு 30 நாள்கள் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தளர்வைப் பயன்படுத்தி, தேசிய ஈரான் எண்ணெய் நிறுவனத்திடம் இருந்து ரிலையன்ஸ் இந்த ஒப்பந்தத்தைச் செய்துள்ளது.

(iii) 5 ஆண்டுகளுக்குப்பின் வர்த்தகம்:

- கடந்த 2019-இல், ஈரான் மீது அமெரிக்கா கடும் தடைகளை விதித்த பிறகு, இந்தியா அந்நாட்டிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை முழுமையாக நிறுத்தியிருந்தது.
- சுமார் 5 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மீண்டும் ஈரான் எண்ணெய் இந்தியாவுக்குள் நுழைகிறது. இந்தக் கச்சா எண்ணெய், பிரெண்ட் கச்சா எண்ணெய் விலையை விட ஒரு பீப்பாய்க்கு சுமார் 7 டாலர் கூடுதல் விலையில் வாங்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(iv) ரஷியாவைத் தொடர்ந்து ஈரான்:

- சந்தை விநியோகப் பற்றாக்குறையைச் சமாளிக்க, ஏற்கெனவே ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய்யை வாங்குவதற்கு அமெரிக்கா அனுமதி அளித்திருந்தது. அதைத் தொடர்ந்து, இந்திய நிறுவனங்கள் ரஷிய எண்ணெய்யை அதிக அளவில் இறக்குமதி செய்தன.
- தற்போது ஈரான் எண்ணெய்க்கும் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால், இந்தியாவின் மற்ற பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களும் ஈரானிடமிருந்து எண்ணெய் வாங்குவது குறித்து தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளன.

2. இந்தியாவின் உற்பத்தி மற்றும் சேவைகள் துறைகளின் வளர்ச்சி மார்ச் மாதத்தில் பெரும் சரிவைக் கண்டுள்ளது. குறிப்பாக, உற்பத்தி துறைக்கான பிஎம்ஐ குறியீடு கடந்த 30 மாதங்களில் இல்லாத அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

(i) எச்எஸ்பிசி இந்தியா வெளியிட்டுள்ள தரவுகளின்படி, பிப்ரவரி மாதம் 56.9-ஆக இருந்த உற்பத்தி துறை பிஎம்ஐ குறியீடு, மார்ச் மாதத் தில் 53.8- ஆக குறைந்துள்ளது. இது 2021, செப்டம்பருக்குப் பிறகு பதிவான மிகக்குறைந்த அளவாகும். அதேபோல், சேவைகள் துறை குறியீ டும் 58.1-லிருந்து 57.2–ஆக சரிந்துள்ளது.

(ii) மந்தநிலைக்குக் காரணங்கள்:

- நடப்பு ஆண்டின் தொடக்கத்தில் வலுவாக இருந்த தனியார் துறை நடவடிக்கைகள், தற்போது அக்டோபர் 2022-க்குப் பிந்தைய மந்தமான நிலையை எட்டியுள்ளன. இதற்கு மத்திய கிழக்கு போர் மற்றும் அதன் தொடர்ச்சியாக விலைவாசி உயர்வு, எரிசக்தி தட்டுப்பாடு உள்பட முக்கியக் காரணங்களாக சுட்டிக்காட்டப்படுகின்றன.

(iii) பொருளாதார தாக்கம்:

- எரிசக்தி இறக்குமதியை அதிகம் நம்பியிருக்கும் இந்தியாவுக்கு, கச்சா எண்ணெய் விலை உயர்வு பெரும் சுமையாக மாறியுள்ளது. இதன் காரணமாக, நாட்டின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன், இந்திய ரூபாயின் மதிப்பு முன்னெப்போதும் இல்லாத வகையில் சரிவைச் சந்தித்து வருகிறது.

3. புவனேசுவரத்தில் நடைபெறும் தேசிய உள்ளரங்கு தடகள சாம்பியன்ஷிப்பில், கம்பு ஊன்றித் தாண்டுதலில் தமிழகத்தின் பரணிகா இளங்கோவன் 4.22 மீட்டரை எட்டி தேசிய சாதனையுடன் சாம்பியன் ஆனார். குண்டு எறிதலில் மகளிர் பிரிவில் அக்ஷயா 11.89 மீட்டரும், ஆடவர் பிரிவில் பாலாஜி 16.74 மீட்டரும் வீசி 3-ஆம் இடம் பிடித்தனர்.

4.சத்தீஸ்கரில் புதன்கிழமை தொடங்கும் கேலோ இந்தியா பழங்குடியின விளையாட்டுப் போட்டிகளில் நாடு முழுவதும் இருந்து 1,300-க்கும் அதிகமான போட்டியாளர்கள் பங்கேற்கின்றனர்.

5.மகளிருக்கான ஐசிசி டி20 தர வரிசையில் பேட்டர்கள் பிரிவில் இந்திய கேப்டன் ஹர்மன்பிரீத் கௌர் 14-ஆவது இடத் துக்கும், பௌலர்கள் பிரிவில் தீப்தி சர்மா 3-ஆவது இடத்துக்கும் முன்னேறினர். பௌலர் அருந்ததி ரெட்டி 11-ஆவது இடத்துக்கு சறுக்கினார்.

6.இந்தியாவின் மெண்டிரெட்டா பௌனீஷ் உள்ளிட்டோர் பங்கேற்கும் ஷாட் கன் உலகக் கோப்பை போட்டி, மொராக்கோவில் புதன்கிழமை தொடங்குகிறது.

7. தாமஸ் மற்றும் உபெர் கோப்பைகள் பூப்பந்துடன் தொடர்புடையவை.

8. மத்திய அரசு அறிமுகம் செய்த மூன்றாம் பாலினத்தவர் சட்டத் திருத்த மசோதா, மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

(i) எதிர்க் கட்சி உறுப்பினர்களின் கடும் எதிர்ப்புக்கு இடையே, குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(ii) 'மூன்றாம் பாலினத்தவர்' (திருநங்கை-திருநம்பி) என்ற வார்த்தைக்கு துல்லிய வரையறை அளிப்பதுடன், அந்த பாலினத்தவருக்கு இழைக்கப்படும் குற்றங்களின் தீவிரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தண்டனைகளை அதிகரிக்க செய்யும் நோக்கில் இவர்களுக்கான 2019-ஆம் ஆண்டு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளும் நோக்கில் 'மூன்றாம் பாலினத் தவர் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்த மசோதா 2026 என்ற மசோதாவை மத்திய அரசு கொண்டுவந்தது.

(iii) 'தற்போதுள்ள சட்டத்தின் பலன்கள் மற்றும் பாதுகாப்பு முழுமையாகச் சென்றடைய வேண்டிய மூன்றாம் பாலினத்தவரை முறையாகவும், உறுதியாகவும் அடையாளம் காண்பதற்குத் துல்லியமான வரையறை மிகவும் அவசியம் என்றும் மசோதாவில் வலியுறுத்தப்பட்டது.

(iv) இதன் மீது விவாதம் நடத்தி, ஒப்புதல் பெறுவதற்காக அந்த மசோதாவை, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் வீரேந்திர குமார் மக்களவையில் தாக்கல் செய்தார்.

(v) அப்போது பேசிய அவர், 'சட்டத்தின் பலன்கள் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்த 'மூன்றாம் பாலினத்தவர்' என்பதற்கான துல்லியமான வரியறை வகுக்கப்படுவது அவசியம். அதற்காகவே இந்த மசோதா அறிமுகம் செய்யப்படுகிறது. இவர்களுக்கென தனி மருத்துவ வாரியம் உருவாக்கப்படுவதையும் இந்த மசோதா வகை செய்கிறது. மாவட்ட ஆட்சியர்கள் சார்பில் இவர்களுக்கென அடையாள அட்டைகளும் வழங்கப்படும்' என்றார்.

(vi) விவாதங்களுக்கு பதிலளித்த மத்திய அமைச்சர் வீரேந்திர குமார்,'மூன்றாம் பாலினத்தவர் சட்ட அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பைப் பெறு வதை இந்த மசோதா தொடர்ந்து உறுதி செய்யும். இவர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு 2019-ஆம் ஆண்டு சட்டப்படி அதிகபட்சம் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனைதான் விதிக்கப்படும். ஆனால், மசோதாப்படி, அதிபட்சம் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது என்றார்.

(vii) அதைத் தொடர்ந்து, எதிர்க்கட்சிகள் முன்வைத்த ஆட்சேபங்கள் மற்றும் திருத்தங்கள்

நிராகரிக்கப்பட்டு, மசோதாவை குரல் வாக்கெடுப்புக்கு அவைத் தலைவர் அனுமதித்தார். அதில், அதிகமானோர் ஆதரவளித்ததைத் தொடர்ந்து, மசோதா நிறைவேற்றப்பட்டதாக அவைத் தலைவர் அறிவித்தார்.

9. கடந்த 13 ஆண்டுகளாக கோமா நிலையில் சிகிச்சை பெற்றுவந்த 31 வயது ஹரீஷ் ராணாவை கருணைக் கொலை செய்ய உச்சநீதிமன்றம் அனுமதி அளித்திருந்த நிலையில், தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அவர் உயிரிழந்தார்.

(i) உத்தர பிரதேச மாநிலம், காஜியாபாதைச் சேர்ந்த பஞ்சாப் பல்கலைக்கழக பி.டெக். மாணவரான ஹரீஷ் ராணா, கடந்த 2013-ஆம் ஆண்டில் 4 ஆவது மாடியில் விளையாடிக் கொண்டிருந்தபோது கீழே தவறி விழுந்தார்.

(ii) இதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து, கடந்த 13 ஆண்டுகளாக அவர் கோமாவில், உயிர் காக்கும் கருவி உதவியுடன் சிகிச்சை பெற்று வந்தார். எனினும், உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

(iii) இதைத் தொடர்ந்து, ஹரீஷை கருணைக் கொலை செய்ய அனுமதிக்கக் கோரி, உச்சநீதிமன்றத்தில் அவரின் பெற்றோர் ரிட் மனு தாக்கல் செய்தனர். ஹரீஷுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிப்பதால் எந்தப் பயனும் இல்லை என எய்ம்ஸ் மருத்துவர்கள் சார்பிலும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதைப் பரிசீலித்த உச்சநீதி மன்றம், நாட்டிலேயே முதல் முறையாக, ஹரீஷ் ராணாவுக்கு அளிக்கும் உயிர் காக்கும் சிகிச்சையைநிறுத்தி, கண்ணியமான முறையில் அவரைக் கருணைக் கொலை செய்ய கடந்த மார்ச் 11-ஆம் தேதி அனுமதியளித்தது.

(iv) அதைத் தொடர்ந்து, உயிர் காக்கும் கருவி உதவியுடன் வீட்டில் சிகிச்சை பெற்றுவந்த ஹரீஷ் ராணா, தில்லி எய்ம்ஸ் வளாகத்தில் உள்ள டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் ரோட்டரி புற்றுநோய் மருத்துவமனையின் துணைப் பராமரிப்புப் பிரிவுக்கு மார்ச் 14-ஆம் தேதி மற்றப்பட்டார்.

(v) இறுதியாக அங்கு அவருக்கு, ஊட்டச் சத்து மற்றும் மருந்துகள் அளிப்பது படிப்படியாக நிறுத்தப்பட்டு உயிர் காக்கும் கருவியும் அகற்றப்பட்ட நிலையில் அவரின் உயிர் பிரிந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

(vi) மருத்துவமனையின் நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறை, புற்றுநோய் மயக்கவியல் மற்றும் தணிப்புத் துறை, மனநல மருத்துவம் ஆகிய துறைகளைச் சேர்ந்த மருத்துவக் குழுவினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

10. இந்தியாவில் கல்விக்கும் வேலைவாய்ப்புக்கும் இடையிலான முக்கிய இடைவெளி குறித்து அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம் நடத்திய சமீபத்திய ஆய்வின் கண்டுபிடிப்புகள்:-

(i) வரலாற்று மற்றும் நிறுவன ரீதியான வளர்ச்சி (கடந்த 35 ஆண்டுகள்)

- கடந்த 35 ஆண்டுகளில், இந்தியாவில் உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை 1,644-லிருந்து 69,534-ஆக உயர்ந்துள்ளது.
- 2010-ஆம் ஆண்டில், ஒவ்வொரு ஒரு லட்சம் இளைஞர்களுக்கும் 29 கல்லூரிகள் இருந்தன; தற்போது, இந்த எண்ணிக்கை ஒரு லட்சத்திற்கு 45-க்கும் மேற்பட்ட கல்லூரிகளாக அதிகரித்துள்ளது.
- சாதி, பாலினம் மற்றும் வருமானம் ஆகிய தடைகளைத் தாண்டி, ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்குவதன் மூலம், கல்வித் துறை ஒரு "பெரும் மைல்கல்லை" எட்டியுள்ளது.

(ii) தற்போதைய பொருளாதார மற்றும் வேலைவாய்ப்பு எதார்த்தம் (2023–2024)

- இளைஞர் வேலையின்மை: இந்தியாவில் உள்ள 6.3 கோடி இளைஞர்களில், 1.1 கோடி பேர் தற்போது வேலையின்றி உள்ளனர்.
- 15 முதல் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் சுமார் 40 சதவீதத்தினரும், 25 முதல் 29

வயதுக்குட்பட்டவர்களில் 20 சதவீதத்தினரும் தீவிரமாக வேலைவாய்ப்பைத் தேடி வருகின்றனர்.

- வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் மொத்த மக்கள் தொகையில், பட்டதாரிகள் (பட்டப்படிப்பு முடித்தவர்கள்) 67 சதவீதத்தை வகிக்கின்றனர்.
- 2023-ஆம் ஆண்டில், பட்டம் பெற்றவர்களில் வெறும் 7 சதவீதத்தினரால் மட்டுமே நிரந்தரமான ஒரு வேலையைப் பெற முடிந்தது என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.
- உற்பத்தி மற்றும் தொழில்துறைத் துறைகளுக்குத் தேவைப்படும் குறிப்பிட்ட திறன்கள், 46 முதல் 50 சதவீதம் வரையிலான பட்டதாரிகளிடம் இல்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.
- தற்போதைய பாடத்திட்டங்களும் கற்பித்தல் முறைகளும் தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு இணையாகப் பரிணமிக்காமல், காலாவதியான நிலையிலேயே நீடிக்கின்றன.

(iii) துறைசார் ஏற்றத்தாழ்வு

- விவசாயச் சார்பு: மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) உற்பத்தித் துறையின் பங்கு அதிகரித்திருந்தாலும், அது அதற்கு இணையான எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவில்லை; இதன் விளைவாக, வேலை செய்யும் மக்கள் தொகையில் 42 முதல் 45 சதவீதம் பேர் இன்றும் விவசாயத்தையே சார்ந்திருக்கின்றனர்.
- ஒவ்வொரு ஆண்டும் சுமார் 50 லட்சம் பேர் பட்டம் பெறுகின்றனர்; ஆனால், விவசாயம் சாராத துறைகளில் வெறும் 28 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் மட்டுமே உருவாக்கப்படுகின்றன.
- மாற்று வழிகள் இல்லாத காரணத்தினால், பல பட்டதாரிகள் தாங்கள் முன்பு நிராகரித்த, குறைந்த ஊதியம் கொண்ட வேலைகளையே தற்போது ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளனர். (iv) எதிர்கால கணிப்புகள் மற்றும் இலக்குகள் (2030–2055)
- 2030-ஆம் ஆண்டிற்குள், 15 முதல் 59 வயதுக்குட்பட்டோரை உள்ளடக்கிய, உலகின் மிகப்பெரிய உழைக்கும் வயதுடைய மக்கள் தொகையை இந்தியா கொண்டிருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது; இது 100 கோடிக்கும் அதிகமான மக்களைக் கொண்டதாக இருக்கும்.
- இந்த "மக்கள் தொகைப் பெருக்கப் பலன்" (Demographic Dividend) 2030-ஆம் ஆண்டில் தனது உச்சத்தை எட்டும் என்றும், 2055-ஆம் ஆண்டு வரை இந்தியப் பொருளாதாரத்திற்குத் தொடர்ந்து நன்மையளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- பட்டதாரிகள் உண்மையில் வேலைவாய்ப்பு பெறும் தகுதியுடன் இருப்பதை உறுதிசெய்யும் வகையில், கல்வி முறை தொழில்துறைத் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படாவிட்டால், இந்த மக்கள் தொகை பலம் ஒரு "பொருளற்ற சக்தியாகவே" இருக்கும் என்று அந்த அறிக்கை எச்சரிக்கிறது.

(v) இரண்டாம் நிலை

உலகளாவிய சூழல் :-

- இது தொடர்பான மற்றொரு அறிக்கையில், 2026-ஆம் ஆண்டிற்கான உலகப் பொருளாதார வளர்ச்சி, ஏமாற்றமளிக்கும் வகையிலும் சீரற்ற முறையிலும் 2.7 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக உலக வங்கியும் ஐக்கிய நாடுகள் சபையும் எச்சரித்துள்ளன.
- செயற்கை நுண்ணறிவுத் துறையில் (AI) செய்யப்படும் பிரம்மாண்டமான முதலீடுகள், உண்மையில் லாபத்தை ஈட்டித் தருமா என்பது குறித்த ஐயங்கள் தற்போது எழுந்துள்ளதாக உலக வங்கி தொடர்ந்து எச்சரித்து வருகிறது